மாதர் போதினி

No. 258 ஜூலை 1919 No. 7

THE WOMEN'S CHRISTIAN COLLEGE

பெண்கள் கிறிஸ்தவ சர்வகலாசாலை

உயர்தரக் கல்வியினால் மனுஷர் அடையும் நன்மைகளை நன் குணர்ந்த பரோபகாரிகளில் பலர், பெண்கள் உயர்தரக் கல்வி கற்ப தால் நாட்டிற்கு மிக்க நலமுண்டாகுமென்று கருதி, பெண்களுக் கென்று பிரத்தியேகமாய் ஓர் சர்வகலாசாலை ஸ்தாபிக்க விரும்பினார் கள். இந்தியாவில் இவ்வித கலாசாலை ஏற்படுத்த முதலாவது ஆசித் தவர் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுமுள்ள சில மிஷனெரி மாரே. இவர்கள் ஜெபத்தோடு கோரின காரியம், பன்னிரண்டு மிஷன்கள் ஒருங்குசேர்ந்து சம்மதித்துப் பலவகையாலும் உதவி செய்ததால் கைகூடி, 1915-ம் வருஷத்[illegible] [illegible]களுக்கென்று பிரத்தியேகமாய் ஓர் சர்வகலாசாலை [illegible] ஸ்தாபிக்கப் பட்டது.

இந்தக் கலாசாலைக்கு மேலதிகாரியாக (P[illegible]al) மிக்க பிரக் கியாதிபெற்று Westfield காலேஜில் தலைவராயிருந்த Miss Mac-Dougall அம்மாள் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் வெஸ்லியன் மிஷன் கனம் மானகன் ஐயரை மணஞ்செய்த Dr. Monahan அம்மாளுடைய சகோதரி.

இந்தக் காலேஜுக்கு விசாரணைக்காரராகவும் முக்கிய உபாத்தி யாயராகவும் (Professor) Miss Bretherton அம்மாள் நியமிக்கப்பட் டார்கள். இவர்கள் Bedford காலேஜில் கற்றுத் தேர்ந்து சென்னை Y. M. C. A. ல் செக்ரெட்டேரியாக விருந்து மாணுக்கர் தன்மையை யும் அவர்களுக்கென்று செய்யப்படும் வேலையையும் நன்குணர்ந்த வர்கள். இவர்கள் மாணுக்கர்மேல் மிக்க அன்பும் பட்சமுமுடைய வர்களாய், பாரதூர யோசனையோடு, மிக்க சிரமமெடுத்து காலேஜ் ஏற்பாட்டுக்கு வேண்டிய சகலத்தையும் சித்தஞ்செய்தார்கள். இவ்

விஷயத்தில் ஏற்ற ஆலோசனை சொல்லி ¦சமய சகாயஞ் செய்து வந்தவர், இந்த அம்மாளை 1917-ம் வருஷத்தில் மணஞ்செய்த Honourable George Pittendrigh துரையே.

முதலாவது இந்தக் கலாசாலை சென்னை கீழ்ப்பாக்கத்தில் Hyde Park என்றவிடத்தில் ஆரம்பமாயிற்று. [illegible]வரும்போது சில மாண வர் மாத்திரமே இருந்ததால் அ[illegible]ம் முதல்வருஷத்திற்குப் போது மானதாயிருந்தது. அ[illegible] வருஷத்தில் மாணுக்கர் இருமடங்கு அதிகப்பட்டு [illegible]பருக்கு மேலான பேர் சேர்ந்ததால் வேறிடம் பார்[illegible]வண்டுமென்ற கவலையுண்டாயிற்று. சரியான இடம் எங் கும் அகப்படாது திகைத்திருக்கையில், Justice Benson முன் னிருந்த வீடு காலியாயிருந்தது. அது விசாலமான தோட்டத்தோடு பிரமாண்டமான கட்டடமாயிருந்ததால், அதை வாடகைக்கு எடுத்தா லும் பெருந்தொகைவேண்டுமே, கிரயத்துக்கு வாங்குவதைப்பற்றிக் கனவிலும் யோசிக்கலாமா என்று பலவாறாய் எண்ணமிட்டு, கட வுள்தான் ஓர் வழி காட்டவேண்டுமென்று நம்பியிருக்கையில், அன்று திடீரென்று யாவரும் பிரமிக்கத்தக்கவண்ணமாய் அமெரிக்காவி லுள்ள சில சிநேகித பரோபகாரிகள் கிறிஸ்தவ பெண் சர்வகலா சாலைக்கென்று ஓர் பெருந்தொகையைத் தந்தி மணியார்டர் மூலமாய் அனுப்பினார்கள். இது தெய்வச்செயல்தானென்று அவரை ஸ்தோத் திரித்து அக்கட்டடத்தை வாங்க சில நல்ல சிநேகிதரைக்கொண்டு முயற்சித்து அதை வி[illegible]கு வாங்கி, அதைப் பழுதுபார்த்துப் புதிப் பித்து கலாசாலைக்கு[illegible]ணுக்கர் உபாத்தினிமார் குடியிருப்புக்கும் ஏற்றவிதமாய் சில [illegible]ளை மாற்றி ஒழுங்குபண்ணினார்கள்.

வருஷந்தோற[illegible] மாணுக்கர் தொகை அதிகரித்துவருவதால் இப் போது ஒரு புது Hostel கட்டடம் மிகக் கம்பீரமாய் மூன்று மெத் தைகளோடு கட்டப்பட்டு நிறைவாகிறது.

பிரதான கட்டடத்தில் (Main building) பாட வகுப்புகளும், Main Roof, Enclosure, Bungalow, New Hostel முதலிய விடங் களில் உபாத்தினிமார் மாணவர் குடியிருக்கும் அறைகளும் ஏற்பட் டிருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாய் காலேஜ் கோவில் (Chapel) ஒன்று உண்டு. அதில் காலை மாலை ஒழுங்காய் ஜெப ஆரா தனை நடக்கும். ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்ற தினங்களிலும் விசேஷ ஆராதனைகளும் இந்தக் கட்டடத்தில் நடந்தேறும்.

இந்தக் கலாசாலையில் சகலவிதமான பெண்களும் கல்வி கற்று வருகிறார்கள். இந்திய கிறிஸ்தவர்களும், சீரிய கிறிஸ்தவர்களும், இந்துக்களும், ஆங்கில இந்தியரும், ஐரோப்பியரும், அமெரிக்கரு மான மாணவருண்டு.

இந்தக் கலாசாலையைச் சேர்ந்த யாவரும் மனத்திற்கொண்டு அனுசரிக்க ஏற்ற பிரமாணமாக 'ஒளி கொடுக்க, ஒளி பெற்றேன்' என்றர்த்தங்கொள்ளும் 'Lighted to Lighten' என்ற வாசகமேற்பட்டிருக்கிறது. இந்திய மாதர் வீடுகளில் சாதாரணமாய் உபயோகிக்கும் கைவிளக்கும், சூரியகாந்திப் புஷ்பமும் கலாசாலைச் சின்னங்கள். இவைகளில் பிரதானமாய்க் காணப்படும் மஞ்சள், பச்சை, மங்கின செம்மண் நிறம் கல்லூரி வர்ணங்கள். கைவிளக்கைப்போல் அற்பமான மாதராயிருந்தாலும் இருள் நீக்கி வெளிச்சங் காட்டி வீடுகளில் பிரகாசிக்கவேண்டுமென்பதும், சூரியகாந்திப் புஷ்பம் சூரியனையே நோக்கி அழகாய் விளங்குவதுபோல், பெண்களும் நீதியின் சூரியனாகிய கடவுளையே நோக்கி ஜீவிக்கவேண்டுமென்பதும் கருத்தாகும். கலாசாலைப் பாடல் (College Song) என்ற ஒரு பாட்டும் ஆங்கில பாஷையில் Miss Bretherton அம்மாளால் இயற்றப்பட்டுள்ளது.

பரீட்சைகளில் மாத்திரம் தேறி பட்டம்பெறவேண்டுமென்பது கலாசாலையின் முக்கிய நோக்கமல்ல, பெண்களுக்கு சகலவிதக் கல்வியும் புகட்டி, தேசாபிமானமும் சிறந்த சுகுணமுள்ளவர்களுமாக்கி, யாவருக்கும் பிரயோஜனமுள்ளவர்களாக்குவதே கல்லூரிப் படிப்பின் முக்கிய நோக்கம். இந்த சொற்பகாலத்துக்குள் கற்றுத் தேறிப்போன மாணவர் உத்தியோகஞ் செய்யுமிடங்களிலிருந்தும் வீட்டு விசாரணை செய்யுமிடங்களிலிருந்தும் அவர்கள் நன்னடக்கையைப்பற்றியும், வேலை முயற்சியைப்பற்றியும் வரும் நற்சாட்சிப் பத்திரங்களால் கல்லூரியில் செய்யப்படும் சிறந்த வேலையின் தன்மை தெளிவாகும்.

(இன்னும் வரும்.)

ALONE WITH GOD

தேவனோடு தனியே

கிறிஸ்தவ ஜீவியத்தில் நமக்குக் கிடைக்கக்கூடிய சகல ஆசீர்வாதங்களும் தேவனிடத்திலிருந்து நேரேயே நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். மனுஷர் நமக்கு நல்ல ஆலோசனை சொல்லக்கூடியவர்களாயிருக்கலாம். பிரசங்கிகள் இரட்சிப்பின் வழியை நமக்கு விஸ்தரிக்கலாம். விசேஷ மிஷன் நடத்துகிறவர்கள் பரிசுத்த ஜீவியத்தின் இரகசியத்தைத் தங்களால் இயன்றமட்டும் நமக்கு விளக்கிச்

சொல்லலாம். ஆனால் இவைகளினால் மாத்திரம் நிலைவரமான ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்வது கூடாத காரியம். எந்த ஆத்துமா தேவசமுகத்தில் தனியேபோய், தன்னைத் தாழ்த்தி, வெறுமையாக்கி, தன் பிதாவின் பாதத்தைப் பிடித்துக்கொள்ளுமோ அது தான் நிலையான தேவ ஆசீர்வாதத்தைத் தவறாமல் பெற்றுக்கொள்ளும்.

இது ஒரு உண்மையான சத்தியம், இதை நாம் மதிக்கிறதில்லை. நமக்கு வேலைகள் அதிகம், ஜோலிகள் அதிகம், தொல்லைகள் அதிகம் என்று இவ்வாறாக போக்குச் சொல்லிக்கொள்ளுகிறோம். இப்படி நீ சொல்லுவாயாகில் உன் ஆவிக்குரிய ஜீவியம் குன்றிக் குன்றி நாளடைவில் மங்கியே போகும். தேவன் உன்னைத் தம்முடைய பிள்ளையாக்குவது—தேவ ஆவி உன்னை நிரப்புவது—நாடோறும் பரிசுத்த ஜீவியம் செய்வது—எப்போதும் தேவசமுகத்தில் வாசம் பண்ணுவது—உன் ஜீவியத்தில் வரும் பலத்த சோதனைகளை ஜெயிப்பது—ஆகிய இவைகள் சின்னக் காரியங்களல்ல, பெரிய காரியங்கள். தேவன் மாத்திரம் உனக்காக செய்யக்கூடிய காரியங்கள். தேவனுக்கு இடங்கொடு; தேவனுக்கு நேரம் கொடு; போதுமான நேரம் கொடு; அவர் வந்து உன்னில் கிரியை நடப்பிப்பார். உன் உன்னதமான தேவன் உனக்காக யாவையும் செய்துமுடிப்பார். சங். 57: 2 பார்.

தனியே அவரைப் போய் சந்தி; தனியே அவர் உன்னை ஆசீர்வதிப்பார். ஒரு கவர்னர் ஒரு ஊருக்கு வந்தால், ஊரார் ஏகோபித்து அவருக்கு வந்தனோபசாரப்பத்திரம் வாசித்து அவரைப்போய்க் கண்டுகொள்வார்கள். ஆனால் ஒருவன் தனது விஷயத்தில் கவர்னர் ஏதாவது உதவிசெய்யவேண்டுமானால், ஊரார் எல்லாரும் போய்க் கண்டுகொள்ளும்போது கூடப்போய் சலாம்போட்டால் போதுமா? தனியேயும் போகவேண்டுமல்லவா? பொது ஆராதனைக்குப் போ—குடும்ப ஜெபம் வை—ஜெபக்கூட்டங்களுக்குத் தவறாதே—ஆனால் தனியே உன் ஆண்டவரைப் போய்த் தரிசித்து, தனியே அவர் உன்னிடத்தில் பேசும் சிலாக்கியத்தையும் விட்டுவிடாதே. இதற்கு மாத்திரம் நேரம் செலவழிப்பாயானால், உன் ஆத்துமஜீவியம் குன்றிப்போகாது என்பது சத்தியம். உன் சிநேகிதரையும் உன் குடும்பத்தையும் விட்டு, தேவனோடு தனியே தரித்திரு. உன் மகாராஜாவை தனியாய்ப்போய்க் கண்டு பேசிக்கொள்.

1-வது. நீ சொஸ்தமடைய விரும்புகிறாயா? தனியே தேவனிடத்தில் போ.

மாற்கு 7: 32-35 வாசித்துப் பார். கொன்னை வாயையுடைய ஒரு செவிடனை இயேசுவினிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்

அவனை 'ஜனக்கூட்டத்தைவிட்டுத் தனியே அழைத்துக்கொண்டு போய்' சுகமாக்கினர். அப்படியே மாற்கு 8: 22-25 பார். ஒரு குருடனை அவரிடத்தில் கொண்டுவந்து அவனைத் தொடும்படி வேண்டிக்கொண்டார்கள். அவர் 'குருடனுடைய கையைப்பிடித்து அவனைக் கிராமத்துக்கு வெளியே அழைத்துக்கொண்டுபோய்' அவன் கண்களைத் திறந்தார். அதேபிரகாரமாக இன்னும் செய்வார், உன் பாவம், உன் அசுத்தம், உன் சண்டைக்குணம், உன் பெருமை, உன் சோம்பல், உன் குளிர்ச்சி யாவும் உன்னைவிட்டு நீங்கி, சுத்தமாக உனக்கு விருப்பமா? நீயும் ஜனக்கூட்டத்தைவிட்டுத் தனியே போ. அங்கே உன் தேவனைப் போய்ப் பிடி. அவர் உன்னைச் சோதிக்கும்படிக்கும், உனக்குச் சுத்தத்தைக் கொடுக்கும்படிக்கும், அவருடைய பாதத்தில் போய்விழுந்து, 'இயேசுநாதரே, கொன்னை வாயையுடைய மனுஷனைப் பார்த்து பெருமூச்சுவிட்டீரே, நீர் பெருமூச்சுவிடத்தக்க காரியங்கள் என்னிடத்திலும் உண்டு. எப்பத்தா! என்று சொல்லும், அப்பொழுது என் நாவின் கட்டுகள் அவிழ்ந்து, நானும் உமது துதியைச் செவ்வையாய்ப் பேசுவேன்' என்று சொல்லு.

2-வது. தேவனுடைய மகிமையை நீ காணவேண்டுமோ? தேவனோடு தனித்திரு.

மாற்கு 9 : 2 பார். பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் இயேசு தனியே அழைத்துக் கூட்டிக்கொண்டுபோய் அவர்களுக்கு முன்பாக மறுரூபமானர். தானியேல் தனித்து விடப்பட்டபோது தரிசனத்தைக் கண்டான், தேவவசனத்தைக் கேட்டான். (தானி. 10 : 8-9.) 'உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்' என்று மோசே கேட்டான். (யாத். 33 : 18.) தனிமையாக 'அதிகாலமே எழுந்திருந்து' சீனய் மலையில் ஏறிப்போனன். (34 : 4.) அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இரவும் பகலும் நாற்பதுநாள் கர்த்தரோடே இருந்தான். அவன் முகம் பிரகாசித்தது. (34 : 28-29.)

நீ தேவ மகிமையைக் காணவேண்டுமோ? தனித்திரு. உன் சரீர வருத்தத்தையும், தூக்கத்தையும் பெரிய காரியமாய் எண்ணுதே. தேவன் தமது மகத்தான கிரியையை உன்னில் நடப்பிக்க உனக்கு மனமானல் அவருக்கு நேரமும் இடமும் கொடு. பூரண பரிசுத்த ஜீவியம் உன்னில் நாடோறும் விளங்கவேண்டுமோ? நாடோறும் அதிகாலையில் எழுந்து தனியே போ. 'தேவனே உம்முடைய மகிமையை எனக்குக் காண்பியும்' என்று கெஞ்சு. இப்படி நீ செய்வாயானல் அவர் உன்னைத் தூசியிலே தாழத் தாழ்த்துவார். ஆவியான

வர் உன்னை உனக்குக் காட்டுவார். 'தேவனே பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்' என்று ஓலமிடுவாய். அப்பொழுது தைரியமும் சந்தோஷமும் ஆசீர்வாதமும் உண்டாகும். தயவுசெய்து அடுத்த வரி வாசிக்குமுன் மத்தேயு 17 : 5–6; தானி. 10 : 8–12; ஏசா. 6 : 1–8 ; யாத். 34 : 4–8, 29; யோபு 42 : 1–6 இவ்வளவையும் கவனத்தோடு வாசிக்கும்படி மன்றாடுகிறேன்.

3–வது. ஆவிக்குரிய சத்தியங்களை தேவன் உனக்குத் தெளிவாய் விளக்கித்தரவேண்டுமோ? தனியே போய் தேவனிடத்தில் கேள்.

சந்திரரோகியைச் சுகப்படுத்த சீஷர்களால் கூடாமற்போயிற்று இயேசு மலையிலிருந்து இறங்கிவந்தபின் சுகமாக்கினார். அப்பொழுது சீஷர்கள் தனித்து வந்து, 'ஏன் எங்களால் கூடாமற்போயிற்று?' என்று கேட்டார்கள். (மத். 17 : 19.) இன்னும், சீஷர்களுக்கு விளங்காத உவமைகளை அவர்கள் தனித்து இருக்கும்போது அவர்களுக்கு விளக்கிச் சொன்னார். (மாற். 4 : 34.)

பரிசுத்த ஆவியானவரைக் குறித்தும், பரிசுத்த ஜீவியத்தைக் குறித்தும், பாவத்தை ஜெயிக்கும் வல்லமையைக் குறித்தும், மற்றவர்கள் பிரசங்கிக்கிற காரியங்கள் உனக்கு விளங்கவில்லையா? ஒருவேளை மற்றவர்கள் உன் இருதயத்தைக் குழப்பிப்போடுகிறார்களாக்கும். ஜனக்கூட்டத்தை விட்டெழுந்து, தனியே போய், அவர் பாதத்தில் விழுந்து : நீரே எனக்கு பரிசுத்த ஜீவியம் செய்யும் வழியைப் போதியும் என்று உத்தரவு கிடைக்குமட்டும் கெஞ்சு. தேவன் உனக்கும் எல்லாவற்றையும் விளக்குவார் என்பது நிச்சயம்.

4–வது. உன் சுபாவம் முற்றிலும் மாறவேண்டுமோ ? தனியே தேவனைப் போய்ப் பிடி.

யாக்கோபு எத்தன் ; சகோதரனை ஏமாற்றினான் ; தகப்பனை ஏமாற்றினான் ; மாமனை ஏமாற்றினான் ; ஒரு சமயத்தில் ஏசாவினால் தனக்கு மோசம் வரும் என்று பயந்தான். முதல் ஏசாவுக்கு வெகுமானங்கள், பின்பு இவனுடைய வேலைக்காரர் மந்தைகள், பின்பு தன் மனைவி பிள்ளைகள்—எல்லாரையும் அனுப்பிவிட்டு, 'யாக்கோபு பிந்தி தனித்திருந்தான்'. ஆதி. 32 : 16-29 வாசிக்கவும். ஆ! யாக்கோபே, தனிமையாக இரவில் இருந்தது உனக்குப் பயமாக இருந்ததா? அன்றல்லவா நீ தேவ பிரபு ஆனாய்? அன்றல்லவா உன் சுய வல்லமையும் ஏமாற்றும் திறமையும் உன்னைவிட்டு நீங்கிற்று ? ஆம் ! யாக்கோபு தனித்திருந்தான், 'அழுது அவரை நோக்கிக் கெஞ்சி

னன்' என்று ஓசியா 12 : 4 ல் சொல்லியிருக்கிறது. கண்ணீரோடு புலம்பி, தேவ வல்லமைக்காக கூக்குரலிட்டு, பொழுது விடியுமட்டும் போராடி: 'நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போக விடேன்' என்று பிடித்துக்கொண்டான், அன்றுமுதல் வேறு மனுஷனுனன். வாசிக்கிற அன்பானவனே! 'உன் சுபாவம் மாறவேண்டுமா? உன் ஜீவியம் சுத்தமாகவேண்டுமா? நீ தேவ பிரபு ஆகவேண்டுமா? தேவனோடு தனித்திரு, அழுது கெஞ்சி தேவனைப் பிடித்துக்கொள். என்னை நீர் என்னசெய்தாலும் சரி, யாக்கோபைப்போல தொடையைத் தொட்டு நொண்டியாக்கினாலும் சரி, பவுலைப்போல கண்ணைத் தொட்டுக் குருடனாக்கினாலும் சரி, என்னை ஆசீர்வதித்து என் சுபாவத்தை மாற்றினாலொழிய உம்மை விடேன்' என்று விடாப்பிடியாய் நில். உன்னுடைய சகல கரடுமுரடையும் நீக்குமுன் உன்னைவிட்டுப் போகமாட்டார் என்பது நிச்சயம்.

5-வது. உனக்கு இளைப்பாறுதல் வேண்டுமா? தேவனோடு தனியே போ.

சீஷர்களுக்கு ஒரு சமயத்தில் இளைப்பாற நேரமில்லாதிருந்தது, இயேசு: தனித்து சற்றே இளைப்பாறப்போகலாம் வாருங்கள் என்று சொன்னார். மாற்கு 6 : 31 பார்க்கவும். பகல் முழுவதும் பிரசங்க வேலை, பள்ளிக்கூட வேலை, ஆபீஸ் வேலை, படிப்பு வேலை, வீட்டு வேலை, சரீரத்திற்குரிய வேலையாகிய இவைகளால் களைத்துப்போகும் சகோதரரே, இளைப்பாறும்படி இயேசு கூப்பிடுகிறார். நீங்கள் களைத்துப்போக வேண்டுமென்பது உங்கள் இரட்சகரின் விருப்பமல்ல. உங்கள் கடமையின்படி உங்கள் வேலைகளை நீங்கள் செய்த பின்பு, அவர் உங்கள் பக்கத்தில் வந்து நின்று: 'வனாந்தரமான ஓரிடத்தில் தனித்து சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள் என்கிறார்.' நீங்கள் உங்கள் வேலை முடிந்தபின்பு உங்கள் சிநேகிதரோடு பேசிக்கொண்டிருக்கவேண்டும் என்றும், அவர்களோடு உலாவப் போகவேண்டும் என்றும் யோசிக்கிறீர்கள். உங்கள் ஆத்தும ஜீவியம் இவைகளினாலேயே குளிர்ந்துபோனதாகக் காணவில்லையா? சகல சிநேகிதரிலும் உத்தம சிநேகிதரான இயேசு உங்கள் ஒவ்வொருவரையும் பார்த்து வா! நாம் இருவரும் தனித்து சற்றே இருப்போம் என்று கூப்பிடுகிறார். இப்படி சாயந்திரத்தில் வேலை முடிந்தபின் இயேசுவோடு தனிமையாய்ப் போய் இளைப்பாறும் நேரம் எவ்வளவு இன்பமானது! வேலையினால் சோர்ந்துபோகிற என் சகோதரனே, என் சகோதரியே, இதோ, உன் இயேசு உன் பேரில் மனதுருகி, தம்மோடுகூட உலாவும்படி கூப்பிடுகிறார்.

உன் சோர்பை நீக்கும்படி இவ்வளவு நாளும் நீ செய்துவருகிற காரியத்தை விட்டுவிட்டு, இயேசுவைமாத்திரம் கூட்டிக்கொண்டு உலாவப்போ. அவரோடு பேசு. இன்று அதைச் சோதித்துப்பார். உன் ஆத்துமா எவ்வளவு சந்தோஷமாகவும், உற்சாகமாகவும் இருக்கிறதென்று பார்.

6-வது. தளிர்ந்துபோகாமல் எப்பொழுதும் நிலைத்திருக்கும் ஜீவியம் உனக்கு வேண்டுமா?

நாடோறும் தனியே தேவசமுகத்தில் தரித்திரு.

முப்பத்தெட்டு வருஷம் வியாதியாயிருந்தவனை ஓய்வுநாளில் இயேசு சுகமாக்கினர். ஆனல் அவனே அவரோடு தனித்துப் பேசிக்கொள்ளும்படி பிரயாசப்படவில்லை. 'ஜனங்கள் கூட்டமாயிருந்ததால் இயேசு விலகியிருந்தார்' (யோவா. 5 : 13). அதினுல் அவனுக்கு வந்த நஷ்டமென்ன? இயேசுவுக்காக சாட்சிசொல்ல அவனுக்கு ஏலவில்லை. பின்வாங்கிப்போகும் நிலைமையில் இருந்திருக்கிறன். ஆனபடியால் இயேசு கண்டு அவனை எச்சரித்தார். பின்பு அவன் போய் சாக்ஷிசொன்னுன். யோவா. 5: 13-15 பார்க்கவும்.

உன்னுடைய ஜீவியம் வளரவேண்டுமா? தேவ வல்லமையினுல் நாடோறும் பாவத்தினின்று நீ காக்கப்படவேண்டுமா? இரகசியம் இதுதான். நாடோறும் தேவனேடு தனியே தரித்திரு, இதுதான் பரிசுத்த ஜீவியத்தை நிலைநிறுத்தக்கூடியது. தேவனேடு இடைவிடாத ஐக்கியமாய் அவர் சமுகத்தில் வாசம்பண்ணினுல் மாத்திரம் பூரணகீழ்ப்படிதல் கூடியகாரியம். ஏனேக்கு தேவனேடு சஞ்சரித்தான். ஆகவே தேவனுக்குப் பிரியமானவனுக நடந்துகொள்வது அவனுக்குக் கூடியகாரியமாயிருந்தது. உன்னைப் பூரணமாய் தேவனுக்கு ஒப்புவித்துவிட்டாயா? அப்படியானுல் நிலைத்திருப்பதற்கு ஒருவகை சொல்லுகிறேன். நீ ஒரு தீர்மானமும் பண்ணுதே. நான் சொல்லுகிறதை மாத்திரஞ் செய்: ஒவ்வொரு நாளும் அதிகாலையில் தனியே போய் தேவசமுகத்தைத் தேடு, வேதத்தை வாசி, ஆனல் தேவன் அதின்மூலமாய் உன்னை ஆராயும்படி மாத்திரம் கெஞ்சு. முற்றிலும் தேவன் உன் இருதயத்தை நொறுக்கி, யாதொரு சிறு பாவம் அப்போதான் தோன்றினுலும் அதையும் உனக்குக் காட்டும்படி ஜெபித்து, நீ பேசுவதை நிறுத்தி, உன் சிந்தனைகளையும் அலையவிடாமல் அவர் சமுகத்தில் நில்லு. அப்பொழுது உன் ஜீவியத்தின் தவறுதல்களை அவர் உனக்குக் காண்பிப்பார். உடனே ஒத்துக்கொண்டு, உத்தம மனஸ்தாபத்தோடு இயேசுவின் இரத்தத்

தினல் கழுவப்படும்படி கேள். அப்பொழுதே உன்னைக் கழுவுகிறார் என்று நம்பு. அந்த நாளுக்கென்று உன்னை அவருக்கு ஒப்புவி. 'உம்முடைய சமுகம் என்னோடேகூட இன்று முழுதும் செல்லாமல் போனால் என்னை இந்த இடத்திலிருந்து வெளியே கொண்டு போகாதேயும்' என்று மோசேயைப்போல சொல். நீ இப்படி ஆத்திரத்தோடு கெஞ்சும்போது உனக்குள்ளிருக்கும் ஆவியானவர் உன்னைத் தேற்றுவார். நம்பிக்கையே, எழுந்து போ. பகல் முழுவதும் தேவசமுகத்தில் இரு. எந்த இடம், எந்த சிநேகிதன், எந்த புஸ்தகம், எந்த வேலை, எந்த விளையாட்டு உன்னை தேவனிடத்திலிருந்து தூர இழுத்துவிடுகிறதோ அதை விட்டுவிடு. கீழ்ப்படி. அவருடைய சமுகந்தான் உன்னைப் பரிசுத்தமாக காக்கக்கூடியது. அதிகாலையில் மாத்திரம் எந்தப் பாடுபட்டும் இவ்விதமாய் உண்மையோடு செய். பகலிலும் தேவசமுகத்தை நினைத்து பயபக்தியாய் நட. சூரியன் பூமியின்மேல் விழுந்துவிடாதபடி தேவன் காத்துக் கொள்ளுகிறது எவ்வளவு உண்மையோ, அதைவிட அதிகமாய் நீ பரிசுத்தமாகக் காக்கப்படுவது உண்மை. நான் அல்ல, தேவன் அப்படிச் சொல்லியிருக்கிறார். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புது பெலன் அடைவார்கள். ஆத்தும ஜீவியத்தில் ஓடினாலும் இளைப்படையார்கள். எவ்வளவு காலம் அதில் அவர்கள் நடந்தாலும் சோர்ந்துபோகார்கள். ஏசாயா 40 : 31; சங். 121. இவ்வளவையும் இப்போதே வாசித்துப்பார்.

சகோதரனே, இதுதான் நீ இவ்வளவு நாளும் செய்த தப்பிதம். உன் பிரயாசையையெல்லாம் இனி விட்டுவிடு. காலையில் உன்னை தேவனுடைய கையில் வைத்துவிட்டு பகல் முழுவதும் அவர்மேலேயே முற்றிலும் சார்ந்து நில். தேவனுக்கு மாத்திரம் நேரங்கொடு. அவர் தமது வல்லமையுள்ள கைகளை உன்மேல் வைத்து உன்னைச் செப்பனிட்டு, கிறிஸ்துவின் ரூபத்தை உன்னில் சிருஷ்டிப்பார். இடங்கொடு.

தனியே—இதுதான் சுத்தமாகுதலின் இரகசியம். இதுதான் தேவமகிமையைக் காண்பதற்கு இரகசியம் இதுதான் தேவ சக்தியால் விளங்குவதற்கு இரகசியம். இதுதால் உன சுபாவம் முற்றிலும் மாறுவதற்கு இரகசியம். இதுதான் உன் சோர்பு நீங்கி நீ இளைப்பாறுவதற்கு இரகசியம். இதுதான் உன் ஜீவியம் நிலைவரமுள்ளதாயிருப்பதற்கு இரகசியம்.

தேவனோடு தனியே.

CHILDREN'S PAGE

TWO THIEVES AND THEIR END

இரண்டு திருடரும் அவர்கள் முடிவும்

நமது அருமை இரட்சகர் சிலுவையில் அறையப்பட்டபோது இரண்டு திருடர் வலதுபக்கத்தி லொருவனும் இடதுபக்கத்தி லொருவனுமாக அறையப்பட்டார்கள். அவர்களிலொருவனுக்குப் பார்வோனைப்போல மனக்கடினமும் மற்றொருவனுக்குப் பேதுருவைப்போல மனந்திரும்புதலுமிருந்ததால், மனக்கடினமாய் நின்றுத்தவன் நித்திய நரகத்திற்கும், மனந்திரும்பினவன் மேலான மோட்ச வாழ்வுக்கும் ஆளானார்கள்.

இந்த இருவருக்கும் தையிஸ்மா, கெஸ்தா என்று பெயர் என்ற ஒரு பாரம்பரையுண்டு: அது உண்மையோ அல்லவோ தெரியாது. என்றாலும் நாம் அவர்களை அந்தப் பெயரால் அழைக்கலாம். தையிஸ்மா பரியாசம் பண்ணினவன்: கெஸ்தா உணர்வடைந்தவன். இந்த இரண்டு பேருக்கும் நாள் முழுவதும் ஆடு மேய்ப்பது மனச்சோர்பான வேலையாயிருந்தது. பல தடவைகளிலும் அவர்கள் யூதேயாவின் வனாந்தரங்களிலுள்ள வெள்ளைக்கட்டிக் குன்றுகளில் அங்குமிங்கு மிருந்த குகைகளில் நரிகளையும் குழிநரிகளையும் சில சமயங்களில் துஷ்ட மிருகங்களையும் வேட்டையாடினார்கள். இப்படி வேட்டையாடுகையில் ஒரு குகையில் சத்தம் கேட்டது. ஒரு நிமிஷம் அவர்கள் பயந்து நின்றபோதிலும், இருவரிலும் அதிக தைரியசாலியான தையிஸ்மா தைரியமாய் உட்பிரவேசிக்கவும் ஒரு கூட்டம் முரடர் தரையில் உட்கார்ந்து புசிக்கிறதையும் குடிக்கிறதையும் தங்களுக்கு முன்னிருந்த துணிகளையும் மற்றும் பொருள்களையும் பங்கு வைக்கிறதையும் கண்டான். சடுதியாய் அவர்களில் ஒருவன் எட்டிப்பார்த்து தையிஸ்மாவைக் கண்டு, அவன் பலமும் தைரியமுமுள்ளவன் என்று தெரிந்துகொண்டு 'என் பிரிய நண்பனே, வா, உட்காரு, இதைக் குடி' என்று திராட்சரசம் கொடுத்தான். பின்பு ஆகாரமும் அவனுக்குமுன் வைத்தான். அவ்வளவு நல்ல ஆகாரம் தையிஸ்மா அதற்குமுன் புசித்ததில்லை. இதற்குள் கெஸ்தாவும் வந்தான். அவனுக்கும் திராட்சரசமும் ஆகாரமும் கொடுத்தார்கள். இவ்விதமாக இவர்கள் இருவரும் இந்தக் கள்ளர் கூட்டத்தோடு பழகினார்கள். அதுமுதல் ஆடு மேய்த்தலாகிய உற்சாகமற்ற வேலையைவிட அந்த மனுஷருடைய முரட்டு ஜீவியம் அவர்களுக்கு அதிக விருப்பமாயிற்று. இவ்விதமாக தையிஸ்மாவும் கெஸ்தா

வும் யூதேயாவின் மலைகளில் கள்ளராக நாட்கழித்தார்கள். அதுமுதல் அவர்கள் வழிப்பிரயாணிகளை மறித்து அவர்களுக்குள்ள எல்லாவற்றையும் பறித்து இரட்சகர் சொன்ன உவமையில் வருவதுபோலச் சிலரை படுகாயப்படுத்தியும் விட்டார்கள். அவர்கள் ஜீவியம் நற்சுபாவத்தை மழுக்கி இருதயத்தைக் கடினப்படுத்தும் ஜீவியம். தையிஸ்மா மகா குரூரனாகிவிட்டான். ஆனால் கெஸ்தாவுக்கு கொஞ்சம் அனுதாபமும் இருதயக் கனிவும் இருந்தது. பல தருணங்களிலும் அவன் கள்ளர் கையிலகப்பட்ட ஏழை ஸ்திரீகளுக்காகப் பரிந்துபேசி அவர்களை விடுவித்ததுண்டு. ரோட்டில் காவல்காரராயிருந்த ரோமைச்சேவகர் அவர்களுக்குப் பெரிய சத்துருக்கள். ஆனால் யூதேயா அவ்வளவு முக்கியமல்லாத ஓரிடமானதால் அவர்கள் அந்த இடத்தைப்பற்றி அதிகக் கவலையாயிருக்கவில்லை. ஆகையால் பல வருஷங்களாக அக்கூட்டத்தார் தங்கள் கொடிய தொழிலை நடத்திவந்தார்கள். ஆனால் அவர்கள் அதிக தைரியப்படவும் கடைசியாய் பிடிபட்டார்கள். இப்பேர்ப்பட்டவர்களைப்பற்றி ரோமர் அதிகமாய் கவனிக்கிறதில்லை. அகப்பட்டால் அவர்களுக்கெல்லாம் ஒரே தண்டனை. அது மரணக்கினை. அதுவும் மகா குரூரமான மரணமாகிய சிலுவை மரணத்திற்குதான் அவர்கள் தீர்ப்பிடப்படுவார்கள். சாதாரணமாய் அவர்களை எருசலேமுக்குக் கொண்டுபோய் சிறைச்சாலையில் தள்ளி மறுநாள் காலையில் சிலுவையிலறைந்துவிடுவார்கள். நகரத்திற்கு வெளியே ஒரு மலையுண்டு: அதை ரோமர் கல்வாரி யென்பார்கள். இந்த இடம் தலையோட்டுவடிவமாயிருந்ததால் அந்த அர்த்தமுள்ள கல்வாரி என்றழைக்கப்பட்டது. அதற்கு ஒவ்வொருவனும் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு போகவேண்டும். அன்று அவர்கள் கல்வாரிக்கு வந்தபோது வேறொரு ஆளையும் அங்கே கொண்டுவந்தார்கள். அவர்கள் தங்களைப்போன்றவரல்லவென்று இருவரும் உடனே கண்டுகொண்டார்கள். அவர்களிலிருந்த முரட்டுத்தைரியம் அவரில் காணப்படவில்லை. அவர் கண்ணியமும் அமைதலுமுள்ளவராகக் காணப்பட்டார். அவர் அரை உயிராயும், அவர் முகம் சோர்புற்று துக்கம் நிறைந்ததாயும் விளங்கினார். தையிஸ்மா அவரைக் கோழை என்றெண்ணி அவர் தைரியமற்றவரென்று அவரை நிந்தித்தான். ஆனால் கெஸ்தாவோ அவர் துக்கம் சரீர துன்பத்தாலுண்டாகவில்லை என்று உடனே கண்டுகொண்டான். இயேசுவென்று ஜனங்களால் அழைக்கப்பட்ட அவர் சரீர நோவைச் சற்றுகிலும் சட்டைசெய்யாதவரென்று அவனுக்கு விளங்கிற்று. இயேசு ஒரு கிரீடம் தரித்திருந்தாரென்றும், அது முள்ளுகளால் செய்யப்பட்டதென்றும் இடைக்கிடையே அங்கு நின்ற முரட்டுப் போர்ச்சேவகர் பரிகாசமாய்

அவரை ராஜாவென்று சொன்னதையும் அவன் கவனித்தான். இயேசு பதில் பேசாமல் முன்போலவே அமரிக்கையாய் நின்ருர். கடைசியாய் சிலுவைகள் தூக்கி நாட்டப்பட்டன. அந்த நிர்ப்பந்த மனுஷர் குரூர வதை யடைகிறதைப் பார்க்க ஆவலாய் வந்த ஜனங்கள் தங்கள் கவனம் முழுவதையும் இயேசுவுக்கு நேரே செலுத்தினுர்கள். பக்கத்திலே அழுதுகொண்டு நின்ற சில ஸ்திரீகளைத் தவிர மற்றவர்க ளெல்லாரும் அவரைப் பரியாசம்பண்ணினுர்கள். அறிவு மிகுந்தவர் களாகத் தோன்றினவர்கள் இகழ்ந்தார்கள். 'வியாதிஸ்தரை சுகமாக்கி செத்தவர்களையும் உயிரோடெழுப்புவேன் என்று பாசாங்குபண் ணின மனுஷன் இவன்: இவனை நாங்கள் ஒருக்காலும் நம்பவில்லை; இவன் ஒரு எத்தனல்லாவிட்டால் தன்னை இரட்சித்துக்கொள்ளட்டு மேன், அப்போது நாங்கள் விசுவாசிப்போம்' என்று பகிடிபண்ணி ஞர்கள். வழிப்போக்கரும் இப்படியே இகழ்ந்தார்கள். இகழாத வர்களில்லை. இத்தருணத்தில் இயேசு பெருமூச்சுவிட்டு 'பிதாவே! இவர்களுக்கு மன்னியும்' என்று சொல்லுகிறதை கெஸ்தா தன் நோவினூடே கேட்டான். தான் ஒரு நிமிஷம் சிலுவையை விட்டு இறங்கக்கூடுமோனுல் தன்னைச் சிலுவையிலறைந்தவர்களிடம் பழிவாங்கி விடுவேனே என்று எண்ணின கெஸ்தா தன்னைத் துன் பப்படுத்தினவர்களுக்காக இயேசு ஜெபிக்கிறதைக் கேட்டு இதுதான் பலநாளும் தான் கேள்விப்பட்ட இயேசுவாயிருக்குமோ என்று சிந்திக்கலானுன். பல அற்புதமான சுகங்களை வியாதிஸ்தருக்குக் கொடுத்ததாகவும் யூதரின் பெரிய மேசியாவென்றும் சொல்லப் பட்டவர் இவர்தானு என்ற சமுசயம் அவனுக்குள் உண்டாயிற்று. இவன் இயேசுவை அதிகமாய்க் கவனித்தபோது, அவருடைய ஆவி, ஆத்துமா என்பவைகளின் பெலத்தையும், அவருடைய ஆத்தும வேத னையையும் கண்டு இவர்தான் அந்த இயேசுவென்றும் அவர் தேவ னுடைய கிறிஸ்துவென்றும் அறிந்துகொண்டான். இந்த நேர மெல்லாம் தையிஸ்மா சத்தமிட்டு சபித்துக்கொண்டிருந்தான். அவன் தைரியமுள்ள ஒரு பெரும் முரடன். அவனும் இயேசுவைப்பற்றிக் கேட்டிருந்தான். இப்போது அவன் அவர் முகமாய்த் திரும்பி அவரை நிந்தித்தான். 'நீ கிறிஸ்துவானுல் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்' என்ருன். கெஸ்தா இதைக் கேட்டபோது அவனைக் கண்டித்து 40-ம் 41-ம் வசனங்களில் இருக்கும் வார்த்தை களைச் சொன்னுன். அப்புறம் இவன் இயேசுவின் நேருக்குத்திரும்பி, முதலாம் கிறிஸ்தவ ஜெபம் என்று சொல்லியிருக்கும் ஜெபத்தைச் செய்தான். 'ஆண்டவரே, அடியேனை நினைத்தருளும்' என்ற ஜெபத்தை ஏறெடுத்தான். அவன் தன் பாவத்தை அறிக்கையிட்டான்;

தனக்கு வந்த தண்டனை நியாயமானதென்று ஒத்துக்கொண்டான்: அதைப்பற்றி அவன் முறுமுறுக்கவில்லை. பின்பு அவன் இயேசுவின் அன்பு, இரக்கம் என்பவைகளின்மேல் தன்னை முற்றிலும் வைத்துவிட்டான். தன் குணப்படுதலைத் தன் ஜீவியத்தில் விளக்க அவனுக்குச் சமயமில்லாதபோதிலும், இந்த இயேசு தெய்வீகமானவர் என்றும் இப்படி தமது கொடிய வேதனையின் மத்தியிலும் தமது சத்துருக்களுக்காக ஜெபிக்கும் அவர் தனக்கும் உதவிசெய்வார் என்றும் நம்பினான். இதுதான் கிறிஸ்தவ ஜெபத்தின் சாரம்: என் கையில் நான் ஒன்றுங் கொண்டுவராமல் உமது சிலுவையிலேயே தொங்குகிறேன். இது இயேசுவின் அன்பிலேயே முற்றிலும் நம்பிக்கை வைத்தல். இயேசுவின் அன்புக்கும் இரக்கத்திற்கும் அளவில்லையென்று சிலுவை நமக்குப் போதிக்கிறது. யாருடைய இருதயத்திலே அவர் நேருக்கு ஆசையுண்டாகிறதோ அந்த இருதயம் மகா கேடு நிறைந்த இருதயமாயிருந்தாலும் அவர் அன்பு அதின் நேருக்குச் செல்லும்.

Psalm 103

103-ம் சங்கீதம்

இராகம், மணிரங்கு. ஆதிதாளம்.

பல்லவி

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி
என் முழு உள்ளமே அவரின்—பரி
சுத்த நாமத்தை என்றும் ஸ்தோத்திரி. ஆத்துமாவே
கர்த்தரையே ஸ்தோத்திரி.

சரணங்கள்.

1. அவர் செய்த சகல உபகாரம் மறவாதே;
அவர் உன் அக்கிரமத்தை மன்னித்து—கொடும்
உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, அழிவுக்கு
உன் பிராணன் விலக்கி மீட்டார்.— என்.

2. கிருபை இரக்கத்தால் முடிசூட்டி நன்மையால்
திருப்தியாக்குகிறார் உன் வாயை—திரும்ப
சால உன் வயது கழுகுக்குச் சமானமாய்
வாலவயது போலாகும்.— என்.

3. கர்த்தர் ஒடுக்கப்படும் யாவருக்கும்
செய்கிறார் நீதி நியாயங்கள்—தம்
கிரியை இஸ்ரேல் புத்ரர்க்கும், தம்வழியை
தெரியப்பண்ணினார் மோசேக்கும்.— என்.

4. கர்த்தர் உருக்க, இரக்க, நீடிய சாந்தம்,
மிக்க கிருபையும் உள்ளவர்,—அவர்
என்றைக்குங் கோபத்தைக் கொண்டு செலுத்த மாட்டார்;
எந்நாளுங் கடிந்துகொள்ளார்.— என்.

5. நமது பாவங்களுக்குத் தக்கதாக அவர்
நமக்குச் செய்யாமலு மிருந்து,—அவர்
நமது அக்கிரமங்களுக்குத் தக்கதாக
நமக்குச் சரிக்கட்ட மாட்டார்.— என்.

6. எவ்வளவு உயரம் பூமிக்கு வானமோ
அவ்வளவு தொலைதூரம்—அவரின்
கிருபை அவருக்குப் பயந்தவர்களின்மேல்
மிகு பெரியதானது.— என்.

7. எவ்வளவு தூரமோ மேற்கு கிழக்குக்கு
அவ்வளவு தூரமாக—அவர்
நம்முடைய பாவங்கள் எல்லாவற்றையும்
நம்மைவிட்டு விலக்கினார்.— என்.

8. தகப்பன் தன் பிள்ளைக்கு இரங்குகிறதுபோல
தமக்குப் பயந்தோருக்கு இரங்கி,—கர்த்தர்
நம் உருவம் இன்னதென்று அறிந்து அவர்
நம்மை மண்ணாய் நினைக்கிறார்.— என்.

9. மனுஷனுடைய நாட்கள் புல்லதற்கு ஒப்பாம்,
வெளியின் புஷ்பத்தைப்போல பூத்து—காற்று
அதன்மேல் வீசினவுடன் இல்லாமல்போய் இனி
அதன் இடம் அதறியாது.— என்.

10. கர்த்தர் கிருபை அவர்க்குப் பயந்தோர்மேலும்
கர்த்தருடைய நீதி அவர்கள்—பிள்ளை
பிள்ளைகளின்பேரிலும் அநாதியான காலம்
உள்ளது என்றென்றைக்கும்.— என்.

301:

11. அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டு
அவருடைய கட்டளைப்படி—செய்ய
நினைக்கிறவர்களின்மேலே கர்த்தருடைய
தயை என்றென்றைக்குமுள்ளது.— என்.

12. கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனம்
நித்யமாய் ஸ்தாபித்திருக்கிறார் ;—அவர்
ராஜரீகமானது சர்வத்தையும் ஆண்டு
ராஜரீகஞ் செய்யுது.— என்.

13. கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு அவர்
சுத்த வசனப்படி செய்கிற—பலத்த
அவருட சவுரியவான்களான தூதரே
அவரையே ஸ்தோத்திரியுங்கள்.— என்.

14. கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்து அவர்
நித்த பணிவிடைக்காரரான—எல்லா
அவருடைய சர்வ சேனைகளே நீங்கள்
அவரையே ஸ்தோத்திரியுங்கள்.— என்.

15. அவர் ஆளுகை செய்கிற எவ்விடத்திலுமுள்ள
அவர் சகல கிரியைகளே—அவரை
ஸ்தோத்திரியுங்கள்; எனது ஆத்துமாவே,
ஸ்தோத்திரி உன் கர்த்தரை.— என்.

Mrs. K. G. Bonnell, P.B.

'LISTEN TO THE VOICE OF JESUS'

இயேசுவின் அழைப்பைக் கேள்

1. பாலர்களே இயேசு சத்தங் கேளுங்கள்
ஆசையோடே அவர் பாதம் சேருங்கள்
பாதத்திலும் மடியிலும் தாய்மார்கள்
பிள்ளைகளை இயேசுவண்டை வைத்தார்கள்.

2. சீஷர் தாய்மார் நோக்கி, 'வேண்டாம், போய்வாரும்,
ஆண்டவர் களைத்திருக்கிறார் பாரும்'
என்க, இதைக்கேட்டு இயேசு அன்பினால்
பாலரை அன்பாயழைத்தார் கையினால்.

3. தாய்மார் துக்கம் இதைக்கண்டு நீங்கிற்று,
சிறுவர்க்கெல்லாம் ஆசீர்வாதமாயிற்று.
இதுபோல் இன்று இளைஞர்களே வாருங்கள்
இயேசுபாதம் தேடிக் கூடிச்சேருங்கள்.

4. அன்றுபோல இன்றும் இன்ப சத்தமாய்,
பாலா, இயேசு அழைக்கிறார் இன்பமாய்,
இதயத்தோடு பாடி உன்னை அவர்க்கே,
உரிமையாய் நீ படைப்பாயாக இன்றைக்கே.

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1919-௵ ஜூலை௴

1	செ.	அப்.	13.	13—25	11	வெ.	அப்.	18.	1—17	21	தி.	அப்.	21.	27—40
2	பு.	,,	13.	26—41	12	ச.	,,	18.	18—28	22	செ.	,,	22.	1—16
3	வி.	,,	13.	42—52	13	ஞா.	,,	19.	1—12	23	பு.	,,	22.	17—30
4	வெ.	,,	14.	1—18	14	தி.	,,	19.	13—27	24	வி.	,,	23.	1—17
5	ச.	,,	14.	19—28	15	செ.	,,	19.	28—41	25	வெ.	,,	23.	18—35
6	ஞா.	,,	16.	1—13	16	பு.	,,	20.	1—12	26	ச.	,,	24.	1—16
7	தி.	,,	16.	14—24	17	வி.	,,	20.	13—24	27	ஞா.	,,	24.	17—27
8	செ.	,,	16.	25—40	18	வெ.	,,	20.	25—38	28	தி.	,,	25.	1—12
9	பு.	,,	17.	1—15	19	ச.	,,	21.	1—14	29	செ.	,,	25.	13—27
10	வி.	,,	17.	16—34	20	ஞா.	,,	21.	15—26	30	பு.	,,	26.	1—18
										31	வி.	,,	26.	19—22

C. L. S. PRESS, MADRAS—1919